பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆனி 03 | ஞாயிற்றுக்கிழமை | 18.06.2023 | கதிர் 219

# அடுத்த வாரம் சீனா பறக்கிறார் அலி சப்ரி

## கடன் மறுசீரமைப்புப் பேச்சுக்காக அந்த நாட்டு அழைப்பின் பேரில்

கடன் மறுசிரமைப்புத் தொடர்பில் சீன ஆட்சியாளர்களுடன் பேசுவதற்காக அந்த நாட்டின் உத்தியோகபூர்வ அழைப்பின்பேரில் அடுத்த வாரம் சீனா செல்கிறார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் கடன் மறுசீரமைப்புச் செயன்முறைக்குஅவசியமானஒத்துழைப்பை பெறும் நோக்கில் சீன அரசுடன் தனியாகப் பேச்சு நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதத்துக்குள் கடன் மறுசீரமைப்புச் செயன்முறையை பூர்த்திசெய்யவேண்டியுள்ளது. இந்நிலையிலேயே குறித்த பேச்சை நடத்தவேண்டியுள்ளது.

கடன் மறுசீரமைப்பு செயன்முறையைப் பொறுத்தமட்டில் நான்கு பிரதான தரப்பினர் உள்ளனர். அவர்களில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச பல தரப்பு பங்காளிகளிடம் பெற்ற கடன்களை தொடர்ந்துசெலுத்திவருகின்றோம். அதனைத் தவிர்க்க முடியாது.

இரண்டாவதாக சர்வதேச இருதரப்புக் கடன்வழங்குநர்கள்என்றரீதியில்நாடுகளிடம் பெற்ற கடன்களை மறுசீரமைப்பதற்கு ☞2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை லண்டனுக்குப் புறப்படுகிறார். அவர் ஜனாதிபதியாகிய பின்பு 3 ஆவது தடவையாக லண்டன் செல்கிறார். முதல் இரு தடவைகளும் அவரது பயணத்திற்கு இடையூறுகள் ஏதும் இருக்கவில்லை. ஆனால் இந்தத் தடவை அப்படியிருக்காது என்று தெரிகின்றது.

ரணிலின் இந்தப் பயணத்தின்போது அவருக்குக் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்த புலம்பெயர் அமைப்புக்கள் லண்டனில் தயாராகி வருகின்றன.

ரணில் விக்கிரமசிங்கா தங்கி நிற்கப் போகும் விடுதிக்கு முன்னாலும் அதன் பின்னர் அவர் கலந்துகொள்ளும் நிகழ்வு இடம்பெறும் இடத்திலுமாக இரு ஆர்ப்பாட்டங்களுக்கு ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவற்றிற்கு அமைய நாளை பிரித்தானிய நேரப்படி நண்பகல் 12 மணி மற்றும் மாலை 4.30 மணிக்கு என இரு ஆர்ப்பாட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன.

தமிழர்களுக்குத் தீர்வைத் தர ☞2

## கிழக்குக்கான தொடருந்துகளின் சேவையை அதிகரிக்க முயற்சி



(அகீல்)

கிழக்குமாகாணத்திற்கானதொடருந்துகளின் இணைப்பை அதிகரிப்பது குறித்தும், தொடர்ந்து சேவையை நவீனப்படுத்துவது குறித்தும் போக்குவரத்து மற்றும் தபால் அமைச்சர் பந்துல குணவர்தனவை சந்தித்து, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது தபால் ☞2

## பிக்குகள் ரௌடித்தனம் செய்கிறார்கள் கடுமையாக சாடுகிறார் செல்வம் எம்.பி.

புத்தருடைய போதனையை மறந்து இங்கு ரௌடித்தனம் செய்வது எல்லாம் புத்த பிக்குகள்தான் எனக் கடிந்துகொண்டார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன்.

வவுனியாவில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத்தெரிவித்தார். அவர்

அங்கு மேலும் தெரிவித்ததாவது:

குருந்தூர்மலை காணி விடயத்தில் ஜனநாயகக் கூட்டணியுடனான சந்திப்புக்களிலும், ஜனாதிபதி வவுனியா வந்தபோதும் நாம் முன்வைத்த கோரிக்கையை ஏற்று 400 ஏக்கர் விவசாய நிலத்தை மக்களுக்கு பகிர்ந்தளிக்கவேண்டும் என ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

தற்போது பௌத்த பிக்குகள் எல்லா விடயங்களிலும் தலையிடுகிறார்கள். எங்களது பிரதேசத்தில் எங்களுக்குச் சொந்தமான வயல்களை மக்களுக்குவழங்கவேண்டும் என்று நாட்டின் ஜனாதிபதி உத்தரவிட்ட பின்பு பௌத்த பிக்குகள் இதற்கு எதிராகக் குரல் கொடுக்கிறார்கள்.

மூலைக்கு மூலை புத்த கோவில்களைக் கட்ட முனைகிறார்கள். அதை ஒரு பிரச்சினையாக தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்க முயல்கிறார்கள்.

இனப்பிரச்சனையில் கூட புத்த பிக்குகள் இனத் துவேசத்தை கக்குபவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

இங்கு ரௌடித் தனம் செய்வதெல்லாம் புத்த பிக்குகள்தான். என்னைப் பொறுத்தவரை இந்தக் காணி விடயத்தில் பிக்குகள் தலையிடக்கூடாது. ஜனாதிபதி உத்ததரவிட்ட விடயம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். அந்தக் காணிகள்

மக்களுக்கு வழங்கப் படவேண்டும் அது தான் எமது கோரிக்கை. ☞2

## 2 திணைக்களங்களை மூடுவதாக அறிவிப்பு

நிதி,பொருளாதாரஉறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் இரு திணைக்களங்களை மூடுவதாக அறிவித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

உள்ளக வர்த்தக திணைக்களம் மற்றும் தொலைதொடர்பாடல் திணைக்களம்ஆகியவையே மூடப்பட்டுள்ளன. 1979ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நுகர்வோர் பாதுகாப்பு சட்ட ஏற்பாடுகளின் கீழ் ☞2

## ஜனநாயகக் கூட்டணியின் தலைமைக் கூட்டம் இன்று

ந.லோகதயாளன்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கமவகிக்கும்கட்சிகளின்தலைமைத்துவச் சபைக் கலந்துரையாடல் இன்று காலை வவுனியாவில் இடம்பெறுகின்றது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம. வகிக்கும் கட்சிகளான புளொட், ரெலோ, ஈ.பீ.ஆர்.எல்.எவ், ஜனநாயகப் போராளிகள் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கட்சி என்பவற்றின் தலைவர்கள் இன்று காலை 10 மணிக்கு வவுனியாவில்கூடி கலந்துரையாடவுள்ளனர். இந்தக் கூட்டம் முதலில் கிழக்கு மாகாணத்தில் நடத்தப் படுவதாக இருந்தது. எனினும் மூத்த அரசியல் தலைவரான வீ.ஆனந்தசங்கரியின் பிறந்த நாள்விழாவையொட்டிஅந்தக் கூட்டத்தை ஒத்திவைக்கும்படி விடுக்கப்பட்ட கோரிக் ☞2

## தேசிய பௌதீக திட்டமிடற் கொள்கை வரைவு - 2048 ரணிலிடம் கையளிப்பு

'தேசிய பௌதீக திட்டமிடற் கொள்கை வரைவு - 2048' இனை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில்நடைபெற்றது.

இதன்போது, நகர அபிவிருத்திமற்றும்வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினால் குறித்த வரைவு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

தேசியபௌதீகதிட்டமிடல் திணைக்களத்தினால் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அதன் கீழான ஏனைய நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் பலதரப்பட்ட செயற்றிட்டங்கள் மற்றும்வேலைத்திட்டங்களை உள்ளடக்கியதாக 'தேசிய பௌதீக திட்டமிடற் ☞2

## கண்டாவளைப் பிரதேச செயலரை பொறுப்பிலிருந்து நீக்க பரிந்துரை

ந.லோகதயாளன்.

கிளிநொச்சிமாவட்டத்தில் கண்டாவளைபிரதேசசெயலாளரைஉடன்பொறுப்பிலிருந்து நீக்குமாறு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, பொதுச்சேவைகள் ஆணைக்குழுவிற்குப் பரிந்துரை செய்துள்ளது.

காணிஅனுமதிப்பத்திரம் வழங்குவதில்முறைகேடுகள் உள்ளதாகக்கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் அவரை அந்தப் பதவியிலிருந்து அகற்றுமாறு அமைச்சுப்பரிந்துரைத்துள்ளது. மே26திகதியிடப்பட்ட கடிதம் மூலம் அமைச்சு இந்தப பரிந்துரையை அனுப்பி வைத்தாலும், பொதுச்சேவைகள் ஆணைக்குழு அது தொடர்பில் எந்த முடிவையும் இன்னும்அறிவிக்கவில்லை. கண்டாவளைப்பிரதேசசெயலராக தங்கவேலு பிருந்தாகரன்தொடர்ந்தும்பணியாற்றி வருகின்றார்.

## குடும்பச் செலவு அதிகரித்துள்ளது

இலங்கையில் இந்த ஆண்டில் குடும்பம் ஒன்றின் மாதாந்தச்செலவானது 76,124 ரூபாவாக அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 2023ஆம் ஆண்டுக்கான சமீபத்திய அறிக்கையை மேற்கோள் காட்டிபேராதனைபல்கலைக் கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறையின்பேராசிரியர்வசந்த அத்துகோரல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்தவருடம்ஒருகுடும்பத்தின் மாதாந்த செலவு 63,820 ரூபாவாக இருந்ததாகவும் உணவுக்காக மாதந்தோறும் 40,632 ரூபாய் செலவிடப்பட்டது.

உணவு அல்லாத தேவை களுக்காக ☞2

## வருட இறுதிக்குள் இறக்குமதி கட்டுப்பாடு தளர்வது அவசியம்

### மிலிந்த மொறகொட தெரிவிப்பு

இலங்கை வருட இறுதிக்குள்தனதுபொருளாதாரநிலையை உறுதிப்படுத்துவதும் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துவதும் அவசியமென இந்தியாவிற்கான இலங்கை உயர் ஆணையர் மிலிந்தமொராகொட தெரிவித்துள்ளார்.

இந்தியஊடகமொன்றுக்கு வழங்கியசெவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை தனது வெளிநாட்டுகடன்களை செலுத்துவதை இடைநிறுத்தியுள்ளது பல பொருட்களை இறக்குமதிசெய்வதை இடைநிறுத்தியுள்ளது இவை இலங்கை செய்துள்ள உடன்படிக்கைகளிற்கு எதிரானது.

இலங்கை சர்வதேச நாணயநிதியத்துடன் உடன்படிக்கைசெய்துகொண்டுள்ளதாலேயே உலகநாடுகள் இதற்கு இணங்கியுள்ளன

கடந்த மூன்று நான்கு வருடங்களா நாங்கள் வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்யவில்லை இப்படியே நாங்கள் தொடரமுடியாது கடந்த 18 மாதங்களாக எங்கள் பொருளாதாரம்வீழ்ச்சியடைந்துள்ளது.

பொருளாதாரஉறுதிப்பாட்டுக்கான ஆரம்ப நிலையைக் காண்கின்றோம். பணவீக்கம் அதிகரிக்காத வகையில் வட்டி வீதங்களை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கு மத்திய வங்கி முயல்கின்றது. எரிபொருளிற்கான தேவை குறைக்கப்பட்டுள்ளது இது செயற்கையான விதத்தில் முன்னெடுக்கப்பட்டது.

எனினும் தற்போதைய நெருக்கடியிலிருந்து ☞2

## பண்டாவின் தனிச் சிங்களச் சட்டம் நாட்டுக்குப் மிகப் பெரும் பாதிப்பு

### ஏற்றுக்கொண்டார் அவரது மூத்த மகள் சுனேத்திரா

எனது தந்தை கொண்டுவந்த தனிச் சிங்கள சட்டத்தினால்நாடுபெரும்பாதிப்பை எதிர்கொண்டது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன் என்று முன்னாள் பிரதமர் எஸ்டபியுஆர்டி பண்டாரநாயக்கவின் மூத்த மகளான சுனேத்திரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் கருத்துப்பரிமாறல் நிகழ்வில் கலந்து கொண்டவேளை உங்களது தந்தை தனிச்சிங்கள சட்டத்தை கொண்டுவந்திருக்காவிட்டால் நாடு தற்போது மிகவும்முன்னேற்றகரமான நிலையில் இருந்திருக்கும். இதனைபற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? என்று நேயர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அளித்த பதிலில் மேலும் தெரிவித்ததாவது:

ஆம், நான் இதற்கு பதிலளிக்க விரும்புகின்றேன். அவர் எனது தந்தை, ஆனால் இந்த நேயர் அல்லது நபர் தெரிவித்ததை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கின்றேன். நான் இதனை எப்போதும் தெரிவித்திருக்கின்றேன்.

உண்மையை சொல்லியாகவேண்டும். ஏன் அவர் தனிச்சிங்கள சட்டத்தை கொண்டுவந்தார்? அரசியல் சந்தர்ப்பவாதம் அரசியல் ரீதியில் பிரபலமாவது, இதற்காகத்தான் அவர் அதனைக் கொண்டுவந்தாரா - உண்மையில் எனக்கு தெரியாது. ஆனால் இந்த நபர் தெரிவிப்பது உண்மை. அது எனக்கு ஆழ்ந்த கவலையை அளிக்கின்றத - என்றார்.

## சைபர் குற்றங்கள் அதிகரிப்பு

சைபர் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக கணினி குற்றவிசாரணைப்பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜய நெத்சிறி தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இவ்வருடத்தின் மே மாதம் வரையிலான காலப் பகுதியில் மாத்திரம் 154 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

சமூக ஊடக பயன்பாட்டின் போது, அடையாளம் தெரியாதவர்களிடம் இருந்து வரும் நட்பு அழைப்புகள், குறுந்தகவல்கள் தொடர்பில் அவதானமாகச் செயற்படவேண்டும்.

அவ்வாறான தொடர்புகள் மூலம் பகிரப்படும் தனிப்பட்ட ஒளிப்படங்களை பயன்படுத்திநிதிமோசடிஇடம் பெறுகன்றன. அதே நேரம் ☞2

## மன்னார் குழு மோதலில் குடும்பஸ்தர் படுகொலை

மன்னார், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அச்சங்குளம் கிராமத்தில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி கைகலப்பாக மாறிய நிலையில், ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் மற்றைய குழு நபர் மீது கூரிய ஆயுதத்தால் ☞2

## அத்தியாவசிய சேவைகள் வர்த்தமானி பிரகடனம்

பல நிறுவனங்களின் சேவைகளை அத்தியாவசிய பொதுச்சேவைகளாக பிரகடனப்படுத்தும் விசேட வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளார்.

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மின்சாரம்வழங்களுடன் தொடர்புடைய அனைத்து சேவகைள், பெற்றோலிய பொருட்கள், எரிபொருளின் வழங்கல் அல்லது விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகள், வேலை அல்லது உழைப்பு, ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

மறுத்துவரும் ரணிலின் போக்கைக் கண்டித்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறுவேற்றாமல் தவிர்த்து வருவதைக் கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறவுள்ளன.

..............

ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டணியின்தலைமைத்துவக் கூட்டம் இன்று வவுனியாவில் நடக்கின்றது. அனேகமாக கூட்டணியின் எதிர்காலம் இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கூட்டத்தில் ரெலோவின் சீனித் தொழிற்சாலைத் திட்டம் தொடர்பில் காரசாரமான விவாதங்கள் எதிர்பார்க் கப்படுகின்றன. இந்த விடயத்தில் ரெலோ நடந்து கொண்ட விதம் குறித்து இந்தியா கடும் அதிருப்தி அடைந்துள்ளதை ரெலோ தவிர்ந்த ஏனைய தரப்புக்கள் நன்கு உணர்ந்துள்ளன. அந்தத் தரப்புக்கள் இது தொடர்பில் இந்தியத் தூதரக அதிகாரிகளுடன் நேரில் சந்தித்துத் தமது நிலைப்பாடுகளை விளக்கியுள்ளன. இந்தியாவும் அது தொடர்பில் தனது நிலைப்பாட்டை, எதிர்பார்ப்பை, ஏமாற்றத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றது.

இந்தவிவகாரம்தொடங்கியிதிலிருந்து ரெலோ இந்தியத் தரப்புடன் எந்தச் சந்திப்பிலும் ஈடுபடவில்லை என்பதும் தமது தரப்பு விளக்கத்தை வழங்கவில்லை என்பதும்கூட இந்தியத்தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. எனவே இன்றைய கூட்டத்தில் இந்த விவகாரம் சூட்டைக் கிளப்பும் என்று நிச்சயம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விவகாரம் கூட்டணிக்குள் தலைமைப் பதவியைக் கைப்பற்றும்ரெலோவின் கனவிற்கு உலைவைக்கும் என்பது திண்ணம். ரெலோ இப்படிச் சீனித் தொழிற்சாலை விடயத்தில் மற்றைய கட்சிகளுக்குத்தெரியாமல்ஆட்சியாளர்களுடன் இரகசிய டீல் போடுவது, கூட்டமைப்பில் சம்பந்தர் சுமந்திரன் செயல்களுக்கு ஒப்பானது என்ற நிலைப்பாட்டில் விமர்சிக்கப்படும் என்று தெரிகின்றது. தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா, ஏற்கனவே இந்த விடயத்தை முன்வைத்தே தனித் தலைமை வேண்டாம், கூட்டணிக்குதலைமைத்துவச் சபைதான் வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றார். சீனித் தொழிற்சாலை விவகாரம், தனது கருத்தை வலியுறுத்துவதற்கு அவருக்குப் பெரும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது.

சீனித் தொழிற்சாலை விடயத்திற்குப் பின்னர் ரெலோவை நம்பிக் காரியத்தில் இறங்க முடியுமா என்கிற கேள்வி புளொட், ஈபிஆர்எல் எவ் கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ளதால் இன்றைய கூட்டத்தில் அவையும் ரெலோவுடன் இறுக்கமான போக்கையே கையாளும் என்று தெரிகிறது. ஆகமொத்தத்தில் கூட்டணியின் எதிர்காலம் என்ன என்பது அனேகமாக இன்று முடிவாகிவிடும்.

**இடிமின்னல்**

## அடுத்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசியமான பேச்சு நடத்தப் பட்டுவருகின்றன.

அதன்படி இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு இடையில் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன், அதில் சீன கண்காணிப்பாளராக செயற்படுகின்றது.

மூன்றாவது தரப்பினர் சர்வதேச பிணைமுறி பங்குதாரர்களாகிய வர்த்தக கடன்வழங்குநர்களாவர். அவர்களுடனான பேச்சுக்களின் முடிவில் ஓர் இணக்கப்பாடுஎட்டப்பட்டிருப்பதுடன், அதில் கைச்சாத்திடும் நிலைக்குவந்திருக்கின்றோம். நான்காவது தரப்பினரான உள்ளகக் கடன் வழங்குனர்களுடன்தொடர்ந்துபேச்சு நடத்தப் பட்டுவருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச நாணயநிதியம்எமக்குகடன் உறுதிப்பாடு தொடர்பான செயற்திட்டமொன்றைவழங்கியிருக்கின்றது. அச்செயற்திட்டத்தின் பிரகாரம் கடன் உறுதிப்பாட்டை அடைய 17 பில்லியன் டொலர்கள் உட்பாய்ச்சல் அவசியமாகின்றது. இதனை அடிப்படையாகக்கொண்டே பேச்சு முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. எனவே இறுதியாக சீனா எமக்கு ஆதரவு வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

அடுத்த வாரம் நான் சீனா செல்கின்றேன். அங்கு நடைபெறவுள்ள பொருளாதாரகூட்டமொன்றில்பங்கேற்குமாறு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி இருதரப்பு விடயங்கள் குறித்துப் பேசுவதற்காக சீன ஆட்சியாளர்களும் அழைப்பு விடுத்துள்ளனர். இந்தப் பயணத்தில் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் விசேடமாகப் பேசுவோம். சீனா எம்மைக் கைவிடாது என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது - என்றார்.

## கிழக்குக்கான.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையில் நியமனம் பெற்ற பெருந்தோட்ட இளைஞர்கள் அடிப்படை சம்பள விகிதத்தில் பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர்,

அவர்களுக்குத் தீர்வு வழங்க வேண்டும் என்றும் செந்தில் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

செந்தில் தொண்டமான் முன்வைத்த கோரிக்கைக்கு முன்னுரிமையின் அடிப்படையில்தீர்வு வழங்க பந்துல குணவர்தன ஒப்புக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு ஆளுநருக்குத் தனது வாழ்க்கை வரலாறு புத்தகத்தையும் அவர் அன்பளிப்பாக வழங்கினார்.

கொழும்பில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

## ஜனநாயகக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கு ஏற்ப கூட்டம் இன்றையதினத்திற்குஒத்திவைக்கப்பட்டது. ஆனால், அது மீண்டும் கிழக்கில் நடத்தப் படாமல் வவவுனியாவிற்கு மாற்றப்பட்டுள்ளது.

கட்சிக்கான யாப்பு உருவாக்கம் தொடர்பில் நீண்ட நாளாக நீடிக்கும் சர்ச்சை மற்றும் தலைமைப் பங்கீடு தொடர்பில் இன்றைய கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படும்என்றுஎதிர்பார்க்கப்படுகின்றது.

கட்சியின் செயலாளராக புளொட்அமைப்பைச்சேர்ந்த ராகவன் இருக்கும்நிலையில் தலைவர் பொறுப்பை இரண்டு வருடங்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் சுழற்சிமுறையில் வகிப்பது என்கிற முன்மொழிவு ஏற்கனவே கலந்துரையாடப் பட்டுள்ளது. ஆனால், தனித் தலைமை என்பதை தமிழ்த் தேசியக் கட்சி தொடர்ந்து கடுமையாக எதிர்த்து வருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தலைவராக சம்பந்தர் செயல்பட்டபோது தனித்து முடிவுகளை எடுத்துச்செயற்பட்டார், அதேபோன்றதொரு நிலை மீண்டும் ஏற்படக்கூடாது என்பதில் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா பிடிவாதகமாக இருக்கின்றார்.

அதேநேரம் சுழற்சிமுறைத் தலைமைப் பதவியை ஏற்படுத்தி அதன் முதலாவது தலைவராகத் தாம் வந்துவிடவேண்டும்என்பதில் ரெலோ முனைப்பாக இருக்கின்றது. இதனால் கடந்த தடவை யாப்பு பற்றிக் கூடிப் பேசியபோதும் ஒரு இணக்கமான முடிவு எட்டப்படவில்லை. இன்றைய கூட்டத்தில் இது தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

## குடும்பச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலவிடப்பட்ட தொகை 35,492 ரூபாவாகும்.

குடும்பங்களின் மாத வருமானம் குறைந்துள்ளது. பல்வேறுவேலைகளில்ஈடுபட்டுள்ள கிட்டத்தட்ட இருபது வீத மக்களின் வருமானம் ஐம்பது வீதத்திற்கும் மேல் குறைவடைந்துள்ளது.

உணவுஅல்லாததேவைகளுக்காக செலவிடப்படும் பணத்தில் 23 வீதம் கடனை திருப்பி செலுத்துவதற்காக செலவிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்விக்கு 14 சமவீதமும், மருத்துவம் மற்றும் சுகாதாரத்திற்காக 15 சமவீதமும், எரிபொருளுக்கு 13சமவீதமும், ஆடைகளுக்கு 10வீதமும், போக்குவரத்துக்கு 6 வீதமும் செலவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கை வரைவு - 2048' தயாரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை செயலாளர்களின் உப குழுவின் பரிந்துரையை தொடர்ந்து ஜனாதிபதியின்பங்கேற்புடன் கூடியதானபௌதீகதிட்டமிடற் சபையின் (National Physical Planning Council-NPPC) அனுமதிக்காகவே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது.

தேசியபௌதீகதிட்டமிடற் சபையில் அங்கத்துவம் வகிக்கும் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண ஆளுநர்கள், ஜனாதிபதியின் செயவலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ். சமரதுங்க ஆகியோருடன் தேசிய பௌதீக திட்டமிடற் சபையினை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிரதானிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

## வருட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டதும் நாங்கள் புதிய சவால்களை எதிர்கொள்வோம். கட்டுப்பாட்டுசூழலை இந்த வருட இறுதிக்குள் முடிவிற்கு கொண்டுவர வேண்டும். அதன் பின்னரே இலங்கை நாணயத்தின் உண்மையான பெறுமதி தெரியவரும் என்பதோடு நாட்டிற்கு பொருளாதார வளர்ச்சி அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## சைபர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

இவ்வருடத்தில் இது வரையில் 108 மோசடி செயற்பாடுகள் தொடர்பில் சைபர் குற்றங்கள் பதியப் பட்டுள்ளன. இலகுவான கடவுச்சொற்கள் காரணமாக சமூக ஊடக கணக் குகள் முடக்கப்படுவது அதிகரித்துள்ளது. அவ்வாறான 91 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன - என்றார்.

## அத்தியாவசிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலைகள், வைத்திய இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் பிற ஒத்த நிறுவனங்களில் உள்ள நோயாளிகளின் பராமரிப்பு, ஊட்டச்சத்து மற்றும் சிகிச்சை ஆகியவை அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலையில் தாக்கியுள்ளனர்.

இதன்போது படுகாயமடைந்த குறித்த இளம் குடும்பஸ்தர் நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில்சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்தச்சம்பவத்தில் உயிரிழந்தவர், அச்சங்குளம் கிராமத்தில் வசிக்கும் 25 வயதுடைய ஒரு குழந்தையின் தந்தை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், உயிரிழந்தவரின் சடலம் நானாட்டான் பிரதேசவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவஇடத்துக்குச்சென்ற முருங்கன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 2 திணைக்கள.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாபிக்கப்பட்டஉள்ளகவர்த்தக திணைக்களமே இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று1957ஆம் ஆண்டின்49ஆம்இலக்கஅரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தொலைத்தொடர்பாடல் திணைக்களமும் இரத்து செய்யப்பட்டுள்ளது

## பிக்குகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிக்குகளின்

கூச்சல்களுக்குஎல்லாம் நாங்கள் பதில் சொல்வது எங்களை மலினப்படுத்தும் - என்றார்.

(100)

# நயினை நாகபூசனிக்கு நாளை கொடியேற்றம்






யாழ்ப்பாணம்நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் 2023ஆம் ஆண்டுக்கானஉயர்திருவிழா நாளை கொடியேற்றத்துடன் தொடங்கிஜூலை4தெப்போற்சவத்துடன் நிறைவுபெறவுள்ளது.

இக்காலப் பகுதியில் அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்கள் ஆலயத்தின் புனிதத்தன்மையைப்பேணிக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம் என நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர்சபைதலைவர் கந்தசாமி பரமலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

நயினாதீவில் தற்காலிக பொலிஸ் நிலையம் மற்றும் நடமாடும் நீதிமன்றமும் அமைக்கப்படவுள்ளன. பயணிகளின் நலன்கருதி படகுமற்றும்பேருந்துசேவைகளும் அதிகளவில் இடம்பெறவுள்ளது.

ஆலயத்திற்கு வரும் அனைவரும்ஆசாரசீலர்களாக வருகை தருதல்வேண்டும். ஆலய மற்றும் உள்வீதியில் தொலைபேசிப் பாவனை புகைப்படங்கள் எடுத்தல், ஒளிப்பதிவு செய்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. எனவே இவற்றினைக் கருத் திற்கொண்டு செயற்பட வேண்டும்.

ஆலய வளாகத்தில் பாதணிகளுடன் செல்லுதல் மற்றும் உலாவுதல் ஆகாது. அடியார்கள் ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்ப்பது நல்லது. ஆலயத்திற்கு வருகைதரும் பெண்கள் தமிழ்ப்பண்பாட்டு கலாசார நடைமுறைகளை

பின்பற்ற வேண்டும். ஆண்கள் மேற்சட்டை அணிந்துஆலயத்தினுள்ளும் புறமும் வருதல் தடைசெய்யப்பட்டுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழா தொடர்பாக யாழ். மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

கடற்போக்குவரத்தில் ஈடுபடும் படகுகள் தரச் சான்றிதழை கட்டாயம் பெற்றுக் கொள்வதுடன், படகில் ஏற்றிச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையையும் உறுதிப்படுத்தப்படவேண்டும். தாழ்வுப் படகுகள் ஏணிப்படி வசதி அமைத்தல் கட்டாயம்.

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை, பொலிஸ் பாதுகாப்பு மற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

போதைப்பொருள் பாவனையில்ஈடுபடுவோரைகைது செய்தல், கடற்போக்குவரத்தில் பாதுகாப்பு அங்கிகளை அணிவதைஉறுதிப்படுத்தல், பாடசாலை மாணவர்களின் சாரணர் தொண்டர் சேவை, கடற்போக்குவரத்து நேரத்திற்கமைய தரைப்போக்குவரத்தை ஏற்படுத்தல், வாகனத்தரிப்பிடம், பயணிகளுக்குரிய வசதிகள் இல்லாத படகுகளை சேவை யில் ஈடுபடுவதை தவிர்த்தல், தரை மற்றும் கடற்போக்குவரத்து நேரஅட்டவணையைக் காட்சிப் படுத்தல், மின்இணைப்பு, படகுகளில் மோட்டார் வாகனங்களைஏற்றும்போது பிரதேசசெயலரிடம் அனுமதி பெறல், யாசகம் பெறுவோர் உள்வருவதை தடுத்தல், ஆகியன தொடர்பாகவும் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

NEW SCIENCE HALL
Kannathiddy Road, Jaffna



2025 A/L
கணித, உயிரியல் பிரிவுகள்
நேரடி வகுப்புக்கள்
தமிழ் மொழி மூலம்

PHYSICS
திரு.G.பிரபா
திரு.N.கபிலன்
திரு.R.ராகுலன்

CHEMISTRY
திரு.G. Beno
திரு.T.சுசாந்தன்
திரு.V.K.நந்தா

BIOLOGY
திரு.V.S.குணசீலன்
திரு.K.இராகவன்

COM. MATHS
திரு.P.செந்தில்நாதன்
திரு.S.சிவகரன்

AGRICULTURE
திரு.K.அரசிளங்குமரன்

ICT
திரு.K.கேதீஸ்வரன்

English Medium

PHYSICS
MR.M.KUGANESWARAN
MR.R.RAAKULAN

CHEMISTRY
MR.G.BENO

BIOLOGY
MR.V.S.GUNASEELAN

COM. MATHS
MR.P.SENTHILNATHAN
MR.S.SIVAKARAN

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன
நிகழ்நிலை வகுப்புக்களும் நடைபெறும்
சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்
076 569 3006, 076 566 3006, 0777 91 7611
New Science Hall Jaffna



# தேசியக் கடன் மறுசீரமைப்பில் ஆட்சியாளர்கள் கடும் மும்முரம்

## எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

உள்நாட்டில் தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டு சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்த ஆட்சி நடவடிக்கை எடுத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சி ஒன்றியத்தின் செயற்குழுவானது, நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுக் கூடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வாக, சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்று நாட்டுக்கு நன்மை பயக்கும் உடன்படிக்கையை மேற்கொள்ளும் பேச்சு நடத்தும் யோசனையை ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்பனவே முதன்முதலில் முன்வைத்தன. எனினும் தற்போதைய ஆட்சியாளர்கள் தாமதமாகச் சென்று நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையிலும் மக்களுக்கு பாதகம் விளைவிக்கும் வகையிலும் பலவீனமான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் பொறுப்பற்ற செயற்திட்டத்தினால் பெரும் பாதக நிலை உருவாகியுள்ளது. நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகக் கூறி, நாட்டை வங்குரோத்தடையச் செய்த கொள்ளையர்களை இந்த ஆட்சி பாதுகாத்துக் கொண்டிருக்கிறது.

அவர்களுக்கு சுகபோகம் அனுபவிக்க இடமளித்து, தாமும் சுகபோகம் அனுபவித்து சர்வதேச நாணய நிதியத்துடன் தோல்வியுற்ற ஒப்பந்தத்தை எட்டியுள்ளனர்.

அதன் பிரதிபலனை மக்கள் தற்போது அனுபவித்து வருகின்றனர். இனியும் பொய் கூறுவதற்கு இடமளிக்காமல் இந்த ஆட்சியின் ஏமாற்று வேலைகள் அனைத்தும் அம்பலப்படுத்தப்படும்.

நாடுஇழந்தவளங்களையும், அவற்றை கொள்ளையடித்த கொள்ளையர்களையும் இனங்கண்பதற்கு ஊழல் ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்படவேண்டும். ஜனாதிபதி, நிதி இராஜாங்க அமைச்சர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்டோர் தேசிய கடன் மறுசீரமைப்பு முன்னெடுக்கப்பட மாட்டாது எனத்தெரிவித்தனர். எனினும் தற்போது தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டு சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

இவ்வாறு மக்களிடம் பொய் கூறுவது ஏன் என்ற கேள்வி எழுகின்றது.

இந்தத் திடீர் மாற்றம் நாட்டையும் மக்களையும் பெரும் ஆபத்தில் தள்ளியுள்ளது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு நாட்டில் பொருளாதார உறுதிப்பாடின்மை உருவாக்கும் என்பது ஆட்சியாளர்களுக்குத் தெரியாதா? இவற்றை அறியாமலா இந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன? உலக நாடுகள் பலவும் மக்கள் சார்பாக ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ள போதிலும் தற்போதைய ராஜபக்ச சார்பு ஆட்சியாளர்களால் ஏன் மக்களைப் பற்றிச் சிந்திக்க முடியவில்லை?

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்ட நிலைப்பாட்டில் திடீர் மாற்றம் ஏன் நேர்ந்தது? அது குறித்து நேர்மையாகவும் வெளிப்படையாகவும் யதார்த்தமாகவும் மக்களுக்கு தெளிவுபடுத்துமாறு ஆட்சியாளர்களை வலியுறுத்துகின்றோம் - என்றார்.

### உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பில்

# கடமையை நிறைவேற்றத் தவறிய பொலிஸ் சர்ஜன்ட் பணி நீக்கம்

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் தொடர்பில் வழங்கப்பட்டிருந்த கடமையை உரிய முறையில் நிறைவேற்றாமைக்காக பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் சார்ஜண்ட் ஒருவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். குறித்த சார்ஜண்ட் தாக்குதல் நடைபெற்ற சமயத்தில் கட்டான பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவல் குறித்து நடவடிக்கை எடுக்கத்தவறினார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டு. இதுதொடர்பில் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளதாவது:

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடத்தப்பட்டபோது கடமையிலிருந்த பொலிஸ் புலனாய்வு பிரிவு சார்ஜண்ட் ஒருவர் தனக்கு வழங்கப்பட்ட கடமைகளை முன்னெடுக்காமை தொடர்பில் அடிப்படை விசாரணைகள் நடத்தப்பட்டன.

அடிப்படை விசாரணைகளுக்கு அமைவாக, பொலிஸ் சார்ஜண்டுக்கு எதிராக 12 குற்றச்சாட்டுக்கள் கொண்ட குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. அனைத்துக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் முதற்சந்தர்ப்பத்திலேயே குற்றங்களை அவர் ஏற்றுக்கொண்டமையால் குறித்த பதவியிலிருந்து நீக்குவதற்கு பொலிஸ் மா அதிபரிடமிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக ஜூன் 14 முதல் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் மா அதிபரால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிதி மற்றும் பாதுகாப்புக்கு பதில் அமைச்சர்கள் நியமனம்

பதில் நிதி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி உத்தியோகபூர்வ பயணமாக லண்டன் புறப்பட்டுச் சென்றதை அடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பதில் பாதுகாப்பு அமைச்சராக பிரமித பண்டார தென்னகோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உத்தரவின் பேரில் இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் பதில் பாதுகாப்பு அமைச்சரின் பணிகளை முன்னெடுப்பதற்காக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# முள்ளிப்பொத்தானையில் நேற்று நடமாடும் சேவை

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, மாகாண சமூக சேவைகள் திணைக்களத்துடன் தம்பலகாமம் பிரதேச செயலகமும் முள்ளிப்பொத்தானை ஆரம்ப சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் இணைந்ததாக நடத்திய நடமாடும் சேவை நேற்று முள்ளிப்பொத்தானை திஸ்ஸபுர ஹமீதியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளரின் வழிகாட்டுதலுக்கு இணங்க இடம்பெற்ற குறித்த நடமாடும் சேவையில் குருதிப் பரிசோதனை, கண் பரிசோதனை, பற் சிகிச்சை, வெளிநோயாளர் பிரிவு பொது வைத்திய சேவை, ஆயுர்வேத வைத்திய சேவை, ஆற்றுப்படுத்தல், சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவி பெறுவதற்கான மருத்துவ சான்றிதழ் வழங்கல், பொது சன மாதாந்த உதவி கொடுப்பனவு, நோய் உதவி கொடுப்பனவு (புற்று நோய், சிறு நீரக நோய்), மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணம் வழங்கல், முதியோர் ,தேசிய அடையாள அட்டை இறப்பு பிறப்பு சான்றிதழ் தொடர்பான பல சேவைகளும் இடம்பெற்றன.

இதில் பல நூற்றுக் கணக்கான மக்கள் இலவச சேவையினை பெற்றுக்கொண்டனர். முள்ளிப்பொத்தானை வடக்கு, சிராஜ் நகர், முள்ளிப்பொத்தானை, முள்ளிப்பொத்தானை கிழக்கு, கல்மெடியாவ தெற்கு கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த பொது மக்கள் இதில் நன்மையடைந்தனர்.

இதில் தம்பலகாமம் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள வைத்தியர்கள், முள்ளிப்பொத்தானை ஆரம்ப சுகாதார வைத்தியசாலையின் வைத்தியர் வி.ரன்ஜித், கப்பல் துறை சுதேச மருத்துவ வைத்தியசாலை வைத்தியர்கள், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எம்.எஸ். ஹபீபுள்ளா, தம்பலகாமம் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன், மாவட்ட மேலதிக பதிவாளர் அஸ்வர், பொது சுகாதார பரிசோதகர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் அறிவுறுத்தளுக்கமைய இந்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

# இலட்சியமில்லாத வாழ்க்கை வாழ்க்கையல்ல என்கின்றர் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா

(நூருல் ஹுதா உமர்)

இலட்சியமில்லாத வாழ்க்கை வாழ்க்கை அல்ல என அக்கரைப்பற்று நீதிவான் மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம். எச்.எம்,ஹம்ஸா தெரிவித்தார். அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் சமூதாய சார் சீர்திருத்த திணைக்களத்தின் பங்களிப்புடன் நடைபெற்ற போதைப்பொருள்பாவனை தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேய மாவட்ட நீதிபதி இவ்வாறு கூறினார்.



பாடசாலை அதிபர் ஏ.பீ.முஜீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீதிபதி ஹம்ஸா தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு மாணவரிடத்திலும் தனித்தனி திறமையும் ஆற்றலும், இலட்சியமும் காணப்படுகின்றன அவர்களின் இலட்சியத்தை சிதைக்கின்ற செயற்பாடுகள் மிக கச்சிதமாக செயற்படுத்தப்பட்டு வருவதையறிந்து பல சந்தர்ப்பங்களில் நான் கவலைப்பட்டிருக்கின்றேன். எனது அனுபவத்தில் பல நீதிமன்றங்களில் மாணவர்களை சந்தகேநபர்களாக முன்னிலைப்படுத்துகின்ற போது அவர்களுடன் உரையாடியிருக்கின்றேன். அவர்களது குடும்ப நிலமை, வறுமை, கெட்ட நண்பர்களின் சகவாசம் போன்றன அவர்களைத் தீய செயல்களுக்கிட்டுச் சென்றிருப்பதை அறிய முடிந்தது.

நானும் எனது ஒ.எல். பருவத்தில் பல இணைப்பாடவிதான செயற்பாட்டிலும், விளையாட்டுகளிலும், புறக்கீர்த்திய செயற்பாட்டிலும் ஈடுபட்டிருக்கிறேன். எனது பாடசாலை காலங்ளில் சரியாக பயன்படுத்தியதனால் இன்று உங்கள் முன் நீதிபதியாக வந்திருக்கிறேன். உங்களில் பலர் வைத்தியர்களாகவும், சட்டத்தரணிகளாகவும், பொறியியலாளர்களாகவும், ஏன் நீதிபதிளாகக்கூட வர முடியும். அதை சிதைப்பதற்கு ஒரு குழுவினர் மாபியாவாக செயற்பட்டுக்கொண்டிருப்பதை, அதனால் வரும் அபாயத்தை நீங்கள் அறிந்திருக்கவேண்டும்.

ஒவ்வொரு மாணவனும் இலட்சியமுடையவனாக இருக்கவேண்டும், இலட்சியமில்லாத ஒரு வாழ்க்கை வாழ்க்கையல்ல ஒவ்வொருவரும் பெரும் கனவுகளை காண வேண்டும். இருக்கின்ற இலட்சியத்தை அடைவதற்கு அந்தக் கனவுகளை நனவாக்கும் வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் அப்போதுதான் தவறான பாதைக்குச் செல்லாமல் தப்பிக்கொள்ள முடியும். . உங்களுடைய இலட்சியத்தை அடைவதற்கு தடையாகவிருக்கின்ற கற்களை இனங்கண்டு உங்கள் இலட்சியத்தை முன் நோக்கி நகர்த்துவதற்குத்திட்டமிட்டுசெயற்படவேண்டும். ஏன் என்றால் இலட்சியமில்லாத வாழ்வு அச்சாணியற்ற தேர் போன்றது.மேலும் ஒருவரது வாழ்வில் இலட்சியத்தோடு பயணிக்காமல் மனம்போன போக்கில் வாழ்வது நடைப்பிணத்திற்கு ஒப்பானது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இலட்சியத்தையடைகின்ற பயணத்தில் பின்னடைவுகளை சந்திக்க நேரிடும் அப்போதெல்லாம் துவண்டுவிடாமல் மன உறுதியோடு நமது செயற்பாடுகளை முன்னோக்கி நகர்த்திச்செல்ல அர்ப்பணிப்போடு கருமமாற்ற வேண்டும்.

பின் வரிசையிலிருக்கின்ற மாணவர்கள் எனக்கு கணிதம் வராது, ஆங்கிலம் வராது என்ற எண்ணத்திலிருக்காமல் அந்த எண்ணங்களை இன்றுடன் விட்டுவிடுங்கள். பல பின் வரிசை மாணவர்கள்தான் இன்று பெரும்பெரும் பதவிகளில் இருக்கிறார்கள். முட்டாள் மூலையென்று அழைக்கப்பட்ட பின்வரிசை மூலையில் கல்விகற்ற பேர்னாட்சா பிற்காலத்தில் அறிஞரென்று அழைக்கப்பட்டார் அதேபோன்று தோமஸ் அல்வா எடிசன் போன்ற விஞ்ஞானிகளை அவதானித்தால் அவர்ளுடைய மாணவ பருவ செயற்பாடுகள் அறிவு குறைந்த செயற்பாடுகளாகவே இருந்திருக்கும். பிற்காலத்தில் அவர்கள் சமூதாயத்திற்கு பயனுள்ளவர்களாகவும், அவர்களால் சமூகம் நண்மையடையக்கூடிய வகையிலும் பெரும் அறிஞர்களாக வளர்ச்சி பெற்றுயிருந்தார்கள்.

பெரும்பாலான மாணவர்களுக்கு நீதிமன்ற செயற்பாடுகளை அறிந்திருக்க வாய்ப்பில்லை எனவே நீதிமன்றங்களுக்கு அழைத்துச் சென்று அங்கு நடைபெறுகின்ற விடயங்களை அவதானிக்கச்செய்கின்ற போது எதிர்காலத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடக்கூடாதென்ற எண்ணமும், அச்சமும் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் உருவாகும். அதனால் பல்வேறு படிப்பினைகளை அவர்களின் பேற்றோர்கள் நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லவேண்டும். மாணவர்கள் நீதிமன்றத்திற்கு நேரடியாகச் சென்று பார்ப்பதன் மூலம் எவ்வாறான குற்றச்செயல்களுக்கு எப்படியான தண்டனைகள் வழங்கப்படுகின்றன என்பதை அறிந்து கொள்வார்கள், தண்டனை விதிக்கப்படுவதை நேரடியாகப் பார்க்கின்றபோது அதன் பாதிப்பை மாணவர்கள் உணர்ந்துகொள்வார்கள்.

அண்மைக்காலமாக எமது பகுதிகளில் மட்டுமல்ல இலங்கையின் பல பாகங்களிலும் போதைவஸ்து பாவனை புற்று நோய்போன்று உருவெடுத்து சமூதாயத்தையும், குடும்பங்ளையும் சீரழித்துக்கொண்டிருக்கின்றது. போதைவஸ்து பாவனைபற்றி அறியாத மாணவர்களாகிய எங்களிடம் இதைப்பற்றி ஏன் கூறுகிறார்கலென்று நீங்கள் யோசிக்கலாம் ஆனால் மாணவர்களே நீங்கள்தான் போதை மாபியா குழுக்களால் அல்லது வலைப்பின்னாலால் இலக்கு வைக்கப்பட்டுள்ளீர்கள் உங்களைத்தான் அவர்கள் தேர்வு செய்ய காத்துக்கொண்டிருக்கிறார்கள் இலகுவாக நீங்கள் அவற்றுக்கு அடிமையாகக்கூடிய வகையில் திட்டம் போட்டு செயற்படுகிறார்கள் இதனால் மாணவச் செல்வங்களின் எதிர்காலம் சீரழிக்கப்படுவதோடு போதை வியாபாரம் இலகுவாக அதிகரித்து சமூதாயத்தை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லுகின்றது. பலர் பணம் சம்பாதிப்பதற்கு போதைவஸ்து வியாபாரத்தை ஒரு வருமான மூலமாக கையிலெடுத்துள்ளதால் நமது இளம் தலைமுறையினர் அதற்கு அடிமையாகி தமது வாழ்வை பலிகொடுத்து வருகிறார்கள் - என்றார்.

# முஸ்லிம் சமூகத்தை நட்டாற்றில் விடும் முயற்சி

(அகீல்)

வடக்கு கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை என்றும் அது சம்பந்தமாக நாம் முண்டியடித்துகொண்டு அலட்டிக்கொள்ளத்தேவையில்லை என்றும் அதை வந்த பின் பார்ப்போம் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தொலைக்காட்சி பேட்டியொன்றில் சொல்லியிருப்பது முஸ்லிம் சமூகத்தை நட்டாற்றில் விடும் முயற்சியாகும்.

இவ்வாறு ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி முபாறகப் அப்துல் மீட் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கும் கிழக்கும் இணைக்கப்படவேண்டும் என்பது தமிழ் மக்களின் அபிலாஷை என்றும் அதற்கு குறுக்கே நாம் நிற்கத் தேவையில்லை எனவும் ஹக்கீம் சொல்வது சரியாயின் இது விடயத்தில் முஸ்லிம்களின் அபிலாஷை என்ன என்பதை வெளிப்படுத்துவதும் முஸ்லிம்களின் அதிக வாக்குப்பெற்ற கட்சியின் தலைவரான ஹக்கீமுக்குகடமை இல்லையா? ஏன் அவரால் அதனைச் சொல்ல முடியாமல் உள்ளது.? வடக்கு கிழக்கை இணைக்கும் சந்தர்ப்பம் வந்தால் முஸ்லிம்களிடம் தமிழ்க் கட்சிகள் வரும் என ஹக்கீம் சொல்வதன் மூலம் கனவு கண்டுகொண்டிருக்கிறார். ஏற்கனவே 1987ஆம் ஆண்டு முஸ்லிம்களிடம் கேட்காமல் வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டதுபோல் மீண்டும் இணைக்கப்பட்டால் அதன் பின் தலையில் அடித்துக்கொள்வதா என்ற சாதாரண புத்தி கூட ஹக்கீமுக்கு இல்லையா?

வடக்கு கிழக்கு இணைப்பு விடயத்தில் முஸ்லிம்களின் நிலைப்பாடு பற்றி இப்போதே நாம் நமது நிலைப்பாட்டை பகிரங்கமாக தெரிவிக்காத நிலையில் அவற்றை இணைக்கும் சூழல் வந்ததும் முடியாது என முஸ்லிம்கள் சொன்னால் இவ்வளவு காலமும் உங்கள் நிலைப்பாட்டை சொல்லாமல் இருந்துவிட்டு இப்போது எண்ணை திரண்டு வரும்போது முஸ்லிம்கள் தாழியை உடைக்கலாமா, இது துரோகம் அல்லவா என ஹக்கீம் இழுபட்டு திரியும் தமிழ்க் கூட்டமைப்பினர் முஸ்லிம்கள் மீது பழி போட்டால் என்ன செய்வது என்பதற்கு ஹக்கீமின் பதில் என்ன?

அதே போல் இனப்பிரச்சினை தீர்வுக்கு முஸ்லிம்கள் தடை செய்கிறார்கள் என்ற பழிச்சொல்லுக்கும் சமூகம் ஆளாவது மட்டுமல்ல, உங்கள் நிலைப்பாட்டை முன்னரே சொல்லியிருக்கலாமே என இலங்கை ஆட்சியாளர்களும் கேட்பர். ஆகவே முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் வடக்கு கிழக்கு இணைப்பு சம்பந்தமான அவரது கருத்துக்கள் முஸ்லிம் சமூகத்தை நட்டாற்றில் விடுவதற்காக சொல்லும் செஞ்சோற்றுக்கடனாகவே தெரிகிறது.

ரவூப் ஹக்கீமின் இந்த கபடத்தனத்தை முஸ்லிம்கள் தெளிவாக புரிந்து கொண்டு அவரின் கருத்தை பகிரங்கமாக எதிர்க்க வேண்டும். எக்காரணம் கொண்டும் வடக்கு கிழக்கை இணைக்காமல் பிரிந்த வடக்கு கிழக்கில் அதிகாரம் சமமாக பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதே ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடாகும்.- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## சைபர் குற்றங்களை தடுக்க தீவிர சட்டங்கள் அவசியம்

சைபர் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக கணினி குற்ற விசாரணைப் பிரிவின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. சமூகத்தில்புதிய குற்றப்பிரிவுகளாக உருவாகியுள்ள இந்தக் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கான போதியசட்டங்கள்இன்னும்உருவாக்கப்படவில்லை என்பது பெரும் பலவீனம்.

இவ்வருடத்தின் மே மாதம் வரையிலான காலப்பகுதியில் மாத்திரம் 154 சைபர் குற்ற முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்கிறது கணினி குற்ற விசாரணைப் பிரிவு. தனிப்பட்ட ஒளிப்படங்களை பயன்படுத்தி நிதி மோசடி இடம்பெறுகின்றன.

இவ்வருடத்தில் இதுவரையில் 108 மோசடிச் செயற்பாடுகள் தொடர்பில் சைபர் குற்றங்கள் பதியப்பட்டுள்ளன. இலகுவான கடவுச்சொற்கள் காரணமாக சமூக ஊடக கணக்குகள் முடக்கப்படுவது அதிகரித்துள்ளது. அவ்வாறான 91 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் கணினி குற்ற விசாரணைப் பிரிவு தெரிவிக்கின்றது.

இதுபோன்ற சைபர் மோசடிகளில் ஈடுபடுவதற்காக வேறு நாடுகளில் இருந்து வந்து இலங்கையில் தங்கியிருந்தவர்கள் சிலர் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். எனினும்இணையவழிமோசடிகளும்குற்றங்களும் தொடர்ந்தும்அதிகரித்துக்கொண்டேஇருக்கின்றன.

ஏற்கனவே இருக்கும் சட்டங்களுக்குக் கீழேயே தற்போது சைபர் குற்றவாளிகளுக்கு எதிராகவும் வழக்குகள்தாக்கல்செய்யப்படுகின்றன. எனினும் அதிகரித்துவரும் இந்த சைபர் குற்றங்களைக் கையாள்வதற்கு வேண்டிய நவீன சட்டங்கள் இன்னும் போதியளவில் உருவாக்கப்படவில்லை.

தேவையற்ற வகையில் ஒளி. ஒலி பரப்பு அதிகார சபைபோன்றசட்டங்களில்கவனம்செலுத்திவரும் ஆட்சித் தரப்பு, இதுபோன்ற சமூகத்திற்கு அவசியமான சட்டங்களை இயற்றுவதில் அக்கறையற்றுஇருப்பதுகண்டிக்கத்தக்கது. பெருகி வரும்சைபர்குற்றங்களைக்கட்டுப்படுத்துவதற்குக் காவல்துறையினருக்கு உதவுவதற்கு புதிய சட்டங்கள் அவசியம். அவற்றை உருவாக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

நாடாளுமன்றமும் ஆட்சித் தரப்பும் இது விடயத்தில் அக்கறை செலுத்தவேண்டும்.

சைபர் குற்றங்களைப் பொறுத்தவரையில் இலங்கை ஒரு மென் இலக்கு என்று வர்ணிக்கப்படுகின்றது. அதாவது மிக இலகுவாக சைபர்குற்றங்களைப்புரியக்கூடியஇடமாகஇலங்கை இருக்கின்றது. உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ இங்கு சைபர் குற்றங்களைப் புரிந்துவிட்டு இலகுவாகத் தப்பிவிட முடியும். முக்கியமாக தகவல் திருட்டுத் தொடர்பில் இலங்கையில் உள்ள சட்டங்கள் நவீனமயமாக்கப்படவேண்டும். சைபர் குற்றவாளிகள் இந்த விடயத்தில் மிகத் தீவிரமானவர்களாக இருக்கின்றனர். சைபர் குற்றங்கள்தொடர்பில்2008இல்கொண்டுவரப்பட்ட சட்டம், சைபர் குற்றங்களை முறையாகக் கட்டுப்படுத்துவதற்குப் போதுமானதல்ல.

சர்ச்சைக்குரிய சட்டங்களை இயற்றுவதில் அக்கறைகொண்டுள்ளஇன்றையஆட்சியாளர்கள் நாட்டுக்குஅவசியமானசட்டங்களைஇயற்றுவதில் அந்த அக்கறையைச் செலுத்தினால் சிறப்பாக இருக்கும்.

# சமூக ஊடகங்களில் ஊடக நெறிமுறை

### மாளிகைக்காட்டில் பயிற்சிப் பட்டறை

பாறுக் ஷிஹான்



சமூக ஊடகங்களில் கருத்துகளைப் பகிரும்போது ஊடக நெறிமுறைகளைப் பின்பற்றுவது தொடர்பான பயிற்சி பட்டறை நேற்று நடைபெற்றது.

'சமூக ஊடகங்களில் கருத்துகளைப் பகிரும்போது ஊடக நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் ஒன்றிணைதல்' எனும் தொனிப்பொருளில் தமிழ்மொழி மூல இதற்கு ஒரு நாள் பயிற்சி பட்டறை மாளிகைக்காடுபாவாறோயலிவரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த சமூகம், சமயம், அரசியல் மற்றும் ஏனைய விடயங்களில் சமூக ஊடகங்களில் தங்களது ஆக்கங்களை பகிர்ந்துவரும் சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்எனபல்லினஆண்கள்,பெண்கள் பங்குபற்றுனர்களாக கலந்துகொண்ட இந்நிகழ்வில் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியான நிகழ்வுகளில் வளவாளராக பணியாற்றும் கலாநிதி. எம்.சி.றஸ்மின் வளவாளராகவும், விடிவெள்ளி பத்திரிகை ஆசிரியர் எம்.பி.எம்.பைறூஸ் துணை வளவாளராகவும் பங்கேற்றனர். இந்நிகழ்விற்கு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. அஸ்லம் சஜா தலைமை தாங்கினார்

கருத்து வேற்றுமை, தனியுரிமை, பரபரப்பு, அநாமோதய தகவல் மூலங்கள், சமூக ஊடகம் மற்றும் உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களை மையமாக வைத்து இதன்போது வளவாளரால் விளக்கமளிக்கப்பட்டது. மேலும், சமூக ஊடகம் மற்றும் இலத்திரனியல் ஊடகம் போன்றவற்றின் நெறிமுறைகள் குறித்தான விரிவான விடயங்கள் ஆராயப்பட்டதுடன் மேற்படி நெறிமுறைகள் தொடர்பில் பங்குபற்றியோரிடமிருந்து கருத்துகள் பெறப்பட்டு எதிர்காலத்தில் பிராந்திய ரீதியாக ஊடக நெறிமுறைகளை ஊக்குவிக்கும் செயற்திட்டமும் வரையப்பட்டது.

தவறான தகவல், பரபரப்பு தகவல், புனைதல், போலியான தகவல், சரி பார்ப்பு இல்லாமை, தகவல்களை உறுதிப்படுத்தாமை, வெறுக்கத்தக்க பேச்சுகளைப் பரப்புதல், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் இன்னோரன்ன விடயதானங்களை நோக்காகக் கொண்டு நடத்தப்பட்ட இப்பயிற்சிப் பட்டறையில் நெறிமுறை உட்குறிப்பு, ஊடக நெறிமுறையில் வித்தியசமான அணுகுமுறைகளைக் கையாளுதல், நெறிமுறையைப் பின்பற்றுவதில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் மற்றும் அதற்கு முன்னோக்கியதான பாதை அத்துடன் எதிர்காலத்திற்கானபரிந்துரைகள்போன்ற விடயங்களில் பங்குபற்றுநர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு அவை குறித்து விரிவாகப் பேசப்பட்ட சிறப்பான ஊடக நெறிமுறை தொடர்பான பயிற்சி பட்டறையாக இது அமைந்திருந்தது.

அம்பாறை மாவட்டத்தில் இப்பயிற்சி பயிற்சி பட்டறையை நடாத்துவதற்கான ஏற்பாட்டை சமூக அபிவிருத்தி மன்றம் முன்னெடுத்திருந்தது. பெண்களின் மேம்பாட்டுக்காக பணியாற்றும் இலங்கை முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி ஏற்பாட்டில் சுவீடனை தலைமையகமாக கொண்ட சர்வதேச தொண்டு நிறுவனமான டயகோனியா அனுசரனையில் இந்தப் பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது.

## எஞ்சியுள்ள ஆசிரியர் உதவியாளர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்குக

### ஆசிரியர் சேவைச் சங்கம் கல்வி அமைச்சருக்குக் கடிதம்

மலையகப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 2015 ஆண்டு ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டு எட்டு வருடங்கள் கடந்தும் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்படாத ஆசிரியர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிடமும் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரிடமும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அமைச்சர்கள் இருவருக்கும் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் கடிதம் எழுதியுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2015ஆம்ஆண்டுஆசிரியர்உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டபோது மாதாந்தக் கொடுப்பனவாக 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. பின் பல போராட்டங்களுக்கு மத்தியில் கொடுப்பனவானது 10 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டது. ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்தவர்களைக் கட்டம் கட்டமாக ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கும் வகையில் நியமனம் வழங்கப்பட்டது.

2015 ம் ஆண்டு ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் பெற்றவர்களில் அனேகமானோர் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட்டாலும் சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களில் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு, இறுதி ஆண்டு பரீட்சை பெறுபேறுகள் 2022 ஒக்டோபரில் வெளியாகியும்கூட இதுவரை நிரந்தர நியமனம் வழங்காமல் கல்வி அமைச்சும் மற்றும் மாகாண கல்வி அமைச்சும் இழுத்தடிப்பு செய்து வருகின்றது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் பல கடிதங்களும் அனுப்பியும், போராட்டங்களை நடத்தியும் இவர்களுக்கான நியாயமான தீர்வு இதுவரை வழங்கப்படவில்லை. நாட்டின் பொருளாதார நெருக்கடியில் பெரும்பிரச்சினைகளுக்கு இவ் ஆசிரியர் உதவியாளர்கள் முகம் கொடுத்து வருகின்றார்கள்.

மலையகமக்களின்வாக்கைபெற்று தற்போது கல்வி ராஜாங்க அமைச்சராக இருக்கும்அரவிந்தகுமார்இவ்விடயத்தில் தலையீடு செய்து மிக விரைவில் ஆசிரியர் நியமனத்தை பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் எனக் கேட்டுக் கொள்வதோடு மிக விரைவில் இதற்கான தீர்வு கிடைக்காவிட்டால் போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அப்பாவை ஆண்டவனாய் அனுதினமும் போற்றுகிறேன்!



ஈன்றெடுத்தாள் அம்மா எனைச் சுமந்தார் அப்பா
சான்றோனாய் என்னை சபை வைத்தார் அப்பா
நான் தடுக்கும் வேளை தாங்கிடுவார் நாளும்
வானளவு உயர வாழ்வளித்தார் அப்பா

ஊனுருக எனக்குப் பால் கொடுத்தாள் அம்மா
உயரோங்கி நிற்க உழைப் பீந்தார் அப்பா
தனக் கெனவே எதுவும் சேர்க்காத அப்பா
எனக் கெனவே தேடி குவித்திட்டார் வாழ்வில்

விருப் பென்று எதையும் வெளியிடார் அப்பா
பொறுப்புடனே யாவும் ஆற்றிடுவார் அப்பா
என் உயர்வு ஒன்றே தனக்கான தென்பார்
கண் மணியாய் கருத்தில் இருத்தினார் அப்பா

தோழேற்றி என்னைச் சுகங் காண்பார் அப்பா
தோழனாய் இப்போ ஆகி விட்டார் எனக்கு
வாழ்வினிலே எனக்கு வரம் ஆனார் அப்பா
வணங்கு கின்ற தெய்வமாய் தெரிகிறார் அப்பா

ஊண் உறக்கம் மறந்து உழைப்பாரே அப்பா
உலகமே நான் எனவே நினைப்பாரே அப்பா
தோள் கொடுத்து என்னைச் சுமந்தாரே அப்பா
சுகம் அனைத்தும் கொடுத்து மகிழ்ந்தாரே அப்பா

நாவினிக்க பேசு என வுரைப்பார் அப்பா
நலஞ் சிறக்கும் நட்பை நாடென்பார் அப்பா
கோப மெனும் குணத்தை மறந்துவிடு என்பார்
குணம் என்னும் குன்றேறி நின்றிடுவாய் என்பார்
குறை காணின் களைவார் நிறைவானால் மகிழ்வார்

பொறை நிறைக வென்றே மனமெண்ணி நிற்பார்
நரை காணு முன்னே பலதேடு வென்பார்
அரை குறையாய் கருமம் ஆற்றாதே என்பார்

ஊற்றுப் போல் நில்லு உறங்காது வெல்லு
காற்றைப் போல் இயங்கு கண்ணியத்தை ஏந்து
நாற்றாக விளங்கு நல் விளைச்சல் நல்கு
என்றப்பா நாளும் எடுத் துரைத்து நிற்பார்

இடர் வரா எனக்கு அணையாவார் அப்பா
படர் துன்பம் அனைத்தும் துடைத்திடுவார் அப்பா
விட முடைய அனைத்தும் வெறுத்திடுவார் அப்பா
நட முன்னே என்று வழியாவார் அப்பா

இலக்கிய மாவார் இலக்கண மாவார் எங்களப்பா
குலைத்திடுதலைக்கனம்கொண்டிட மாட்டார் எங்களப்பா
நிலைத்திட நினைப்பார் நிம்மதி நிறைப்பார் நெஞ்சிலப்பா
நிமிர்ந்துமே நிற்பார் நீள்நிலம் வியக்க எங்களப்பா

அப்பாவை எண்ண வெண்ண அளவில்லா ஆனந்தம்
அப்பாவின் அருகிருந்தால் அனைத்தும் என் வசமாகும்
அப்பா என் வாழ்னுக்கு அருமருந்தாய் ஆகிவிட்டார்
அப்பாவை ஆண்டவனாய் அனுதினமும் போற்றுகிறேன்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 200/=

# தெற்கில் 7 விடுதிகள் சுற்றிவளைப்பு: 32 யுவதிகள் உட்பட 39 பேர் சிக்கினர்!

கல்கிஸை, மாலம்பே, கடுவெல மற்றும் தலங்கம பிரதேசங்களில் ஆயுர்வேத மசாஜ் நிலையங்களாக நடத்தப்பட்ட 7 விபச்சார நிலையங்களைப் பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

இதில் 32 யுவதிகள் உட்பட 39 பேர் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிக்கிய 7 நிலையங்களுக்கும் உரிமம் இல்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இரவு வேளைகளில் திறக்கப்படும் இந்த நிலையங்கள் தொடர்பில் பொலி-ஸாருக்குக் கிடைத்த தொடர் தகவலின் அடிப்படையில் நீதிமன்றங்களில் பெறப்பட்ட தேடுதல் உத்தரவுக்கு அமைய இந்தச் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான சுற்றிவளைப்பில் 7 பொலிஸ் குழுக்கள் பங்கேற்றுள்ளதுடன், பொலிஸ் முகவர்கள் ஊடாக குறித்த இடங்களை விபச்சார நிலையங்கள் என உறுதிப்படுத்திய பின்னரே இந்தச் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்களில் பெரும்பான்மையானவர்கள் தூரப் பிரதேசங்களில் வசிப்பவர்கள் என்றும், பொருளாதார நெருக்கடி காரணமாக தெற்கில் வேலைக்கு வந்து கூடுதல் வருமானம் ஈட்டுவதற்காக இரவு வேளைகளில் இந்த நிலையங்களில் வேலை செய்து பணம் சம்பாதித்து வருகின்றனர் என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## சிகிச்சைக்குச் சென்ற நபர் காரில் வந்தவர்களால் வெட்டிக் கொலை!

### களுத்துறையில் பயங்கரம்

களுத்துறை, பெலவத்தை நகரில் உள்ள தனியார் மருத்துவ நிறுவனமொன்றுக்குச் சிகிச்சைக்காகச் சென்ற ஒருவரைச் சிலர் கூரிய ஆயுதங்களால் தாக்கிய நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

கொகரதுவ, பெலவத்த பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

நீதிவான் விசாரணைகளின் பின்னர் சடலம் களுத்துறை நாகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் காலில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெறுவதற்காகப் பெலவத்தையில் உள்ள தனியார் மருத்துவ நிறுவனத்துக்கு வெள்ளிக்கிழமை சென்றிருந்தார்.

அப்போது, கார் ஒன்றில் வந்த சிலர் அவரைக் கூரிய ஆயுதங்களால் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, உயிரிழந்தவர் வீட்டில் இல்லாத நேரத்தில் அங்குச் சென்ற அடையாளம் தெரியாத ஒருவர் கொலை மிரட்டல் விடுத்துச் சென்றிருந்தார் என்று அவரின் தந்தை வாக்குமூலம் அளித்துள்ளார்.

## குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை

தெற்கில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மத்துகம, பெலவத்தை நகரின் மத்தியில் வெள்ளிக்கிழமை மாலை இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பெலவத்த, மிரிஸ்வத்த பகுதியைச் சேர்ந்த 35 வய-துடைய நபரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

பெலவத்தை நகர மத்தியில் உள்ள மருந்துக் கடைக்கு முன்பாக வாள் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டது என்று பொலிஸ் விசாரணைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய கொலையாளி இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாலியல் வன்கொடுமைக்கு 15 வருடகால கடூழியச் சிறை

### பாணந்துறை மேல் நீதிமன்றம் விதித்தது

சிறுமியை பாலியல் வன்கொடுமைக்கு குற்றவாளிக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது பாணந்துறை மேல் நீதிமன்றம்.

இங்கிரிய பிரதேசத்தைச் சோந்த 50 வயதுக் குற்றவாளிக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக, 5,000 ரூபா அபராதம் விதித்த நீதிமன்றம், அபராதத் தொகையை செலுத்தாவிட்டால், மேலும் ஒரு மாதம் கடூழிய சிறைத் தண்டனையை அனுபவிக்கவும் உத்தரவிட்டது.

தனது மனைவியின் முதல் திருமணத்தின் மூலம் பிறந்த 11 வயது மகளை 2007ஆம் ஆண்டு பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தினார் என்று குற்றவாளிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோத சுரங்கம் இடிந்ததில் இரண்டு பேர் புதையுண்டு சாவு

ரக்வானையில் சட்ட விரோதமாக இயங்கி வந்த சுரங்கம் இடிந்து விழுந்ததில் இருவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ரக்வானை - மாதம்பே பிரதான வீதியில் மாதம்பே தோட்ட இலக்கம் 1 பகுதியில் இயங்கி வந்த சட்டவிரோத சுரங்கம் சரிந்து வீழ்ந்தே இந்தச் சோகச் சம்பவம் இடம்பெற்றுள்ளது..

இந்த சட்டவிரோத சுரங்கம் நீண்டகாலமாக இயங்கி வந்த நிலையில், வியாழக்கிழமை இரவு திடீரென சரிந்து விழுந்துள்ளது எனறு பொலிஸார் தெரிவித்தனர். விபத்தின்போது சுரங்கத்தில் 4 பேர் இருந்தனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

அவர்களில் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டு, கஹவத்தை ஆரம்ப வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ரக்வானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஓட்டோ விபத்து சாரதி மரணம்

கொழும்பில் இடம்பெற்ற விபத்தில் ஓட்டோ சாரதி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை வெள்ளவத்தையில் இருந்து கொள்ளுப்பிட்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த ஓட்டோ பம்பலப்பிட்டி வீதியில் பயணித்த போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோர தொலைபேசி கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த ஓட்டோ சாரதி களுபோவில போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

கண்டியில் வசிக்கும் 48 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், பம்பலப்பிட்டி பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விரைவில் புதிய சட்டம் முதலீடு தொடர்பில்

இலங்கையில் முதலீடுகள் தொடர்பில் தற்போதுள்ள சிக்கலான சட்டங்களுக்குப் பதிலாக இந்த வருட இறுதிக்குள் முதலீடுகள் தொடர்பான புதிய சட்டம் கொண்டுவரப்படும் என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதன்படி, அடுத்த வருடம் முதல் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதில் உள்ள சிக்கலான நிலைமைகள் நீக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பான அமைச்சர்கள் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான அனு மதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியபோதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

முதலீட்டாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது உள்ளிட்ட வசதிகளை வழங்குவதற்காக உலக வர்த்தக மையத்தில் முதலீட்டாளர் வசதி மையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும், அது அனைத்து அரச நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

முதலீட்டாளர்கள் தமது பிரச்சினைகளை முன் வைப்பதற்கும், அது தொடர்பான நிறுவனங்களின் தலைவர்களை சந்திப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும், முதலீட்டாளர்கள் தமது பிரச்சினைகளை விரைவாக தீர்த்துக்கொள்ள இந்த நிலையம் வாய்ப்பளிக்கும் எனவும் திலும் அமுனுகம சுட் டிக்காட்டியுள்ளார். புதிய சட்டம் அமுல்படுத்தப்படும் வரை தற்காலிக வேலைத் திட்டமாகவே இது அமுல்படுத்தப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## உயர்தரத்துக்கான மேலதிக வகுப்புக்களை ஒழுங்குபடுத்த விரைவில் நடவடிக்கை

### கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு நடத்தப்படும் மேலதிக வகுப்புக்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தொவித்துள்ளார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: உயர்தர வகுப்புகளில் அறவிடப்படும் கட்டணம், அந்த வகுப்புகளில் வெளியிடப்படும் விடயங்கள் உள்ளிட்டவற்றை அடிப்படையாக கொண்டு இந்த ஒழுங்கு முறையை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, இவ்வருட உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படுவார்கள் எனவும் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் மேலும் தெரிவித்தார்..




## வாகன இறக்குமதியை அனுமதிப்பது தற்போதைய நிலையில் சிக்கலானது

### இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவிப்பு



தற்போதைய பொருளாதார நிலையில் வாகன இறக்குமதியை அனுமதிப்பது சிக்கலுக்குரியது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

கேகாலையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எமது நாடு பொருளாதாரத்தின் அடிமட்டத்துக்கே சென்றிருந்தது. இந்த ஆண்டின் முற்பகுதியில் இருந்து தான் மெல்ல மெல்ல முன்னோக்கி நகரத் தொடங்கியிருக்கின்றோம்..

அடுத்த காலாண்டில், பொருளாதார வளர்ச்சி பெறுமதி வீதம் மறைப் பெறுமதியை நோக்கி நகரும். அந்தச் செயன் முறையையே நாம் எதிர்பார்க்கின்றோம்.

தொடக்கத்தில் 4 ஆயிரம் பொருட்களுக்குத் இறக்குமதித் தடை விதிக்கப்பட்டது. பின்னர் அந்த எண்ணிக்கை கணிசமாக குறைக்கப்பட்டு 1980களில் மாற்றம் அவதானிக்கப்பட்டது.

அதேநேரம் நாம் எரிபொருளை இன்னமும் கோட்டா முறைக்கே வழங்கி வருகின்றோம். அப்படியிருக்கின்றபோது வாகன இறக்குமதியை அனுமதிப்பது சிக்கலுக்குரிய விடயமாகின்றது. ஆகவே அந்த விடயம் சம்பந்தமாக நீண்ட ஆய்வு அவசியமாகின்றது - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# சட்டவிரோதமாக தடுத்து வைத்துத் தாக்கினர் வன உயிரிகள் அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு

## வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதியப்பட்டது






(சண்முகம் தவசீலன்)

கிளிநொச்சி வனஉயிரிகள் திணைக்கள அதிகாரிகள் தன்னைச் சட்டவிரோதமாகக் கைது செய்து ஒரு நாள் இரவு முழுவதும் தமது அலுவலகத்தில் தடுத்து வைத்துத் தன் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்று வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒருவரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிழவன்குளம் பகுதியில் உள்ள தனது வீட்டிற்கு புதன்கிழமை மாலை சென்ற கிளிநொச்சி வனஜீவராசிகள் திணைக்களஅதிகாரிகள்வீட்டில்யாரும் இல்லாத நிலையிலும் வீட்டிற்குள் சென்று சோதனையிட்டுள்ளனர். சட்டவிரோத இறைச்சி இருப்பதாகத் தெரிவித்தே அவர்கள் இவ்வாறு நடந்துகொண்டனர். உங்களுடைய வீட்டை விசேட அதிரடிப்படை சுற்றிவளைத்துள்ளதாகத் தகவல் கிடைத்து அங்கு சென்றபோது வீட்டினுள் சோதனையிட்டவர்கள் உணவுகள் மற்றும் உடைகள் போன்றவற்றை கொட்டி சிதறியிருந்தனர் பொருட்கள் அனைத்தும் சிந்தி சிதறப்பட்டதைப் பார்த்து ஆத்திரமடைந்த அதிகாரிகளுடன் வாய்த்தர்க்கத்தில்ஈடுபட்டேன்என்றார்.

இந்நிலையில்குறித்தஅதிகாரிகள் அதனைத் தமது தொலைபேசியில் வீடியோ பதிவு செய்தபடி எங்களைத் தாக்க முயற்சித்தனர். தமது கடமைக்கு இடையூறு விளைவித்ததாக் கூறி என்னைக் கைது செய்தனர்.

நான் அவர்களது செயற்பாடுகளை வீடியோ பதிவு செய்தபோது போனை தட்டிவிட்டு அதனைன உடைத்து விட்டார்கள். தமது வாகனத்தில் என்னை ஏற்றிச் சென்றவர்கள் அன்று இரவு முழுவதும் தமது அலுவலகத்தில் தடுத்து வைத்து தாக்கினார்கள். பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கினார்கள்.

என்னுடைய வீட்டில் சோதனை நடத்தியபோதும் இறைச்சி எதுவும் எடுக்கப்படவில்லை. அல்லது சட்டவிரோதமாகவேட்டையாடுவதற்கு பயன்படுத்துகின்ற பொருட்களோ எதுவுமே எடுக்கப்படவில்லை. அதிகாரிகளுடன் வாய் தர்க்கத்தில் ஈடுபட்டேன்என்றகாரணத்திற்காகவே அவர்கள் என்னை கைது செய்தனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு நேற்றுப் பதிவு செய்யப்பட்டது.

சிலமாதங்களுக்குமுன்பதாகவும் மாங்குளம்பகுதியில்இளைஞர்ஒருவர் மீது கிளிநொச்சி வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகள் தாக்குதல் நடத்தினர் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தன..

தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பகுதிகளுக்குள் அத்துமீறி வருகின்ற கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த வனஉயிரிகள் திணைகள அதிகாரிகள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மக்களுடன் சண்டித்தனமாக நடந்து கொள்வதாக மக்கள்முறைப்பாடுதெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில்உயர்அதிகாரிகள் நடவடிககை எடுத்து தமக்கு நீதியைப் பெற்றுத் தரவேண்டும் என்று மக்கள் வலியுறுத்துகின்றனர்.

# சிறுநீரக மாற்றுச் சிகிச்சை விழிப்புணர்வு கிரிக்கெட்டில் சட்டதரணிகள் அணி வெற்றி




சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைதொடர்பானவிழிப்புணர்வு கிரிக்கெட் போட்டியில் சட்டத்தரணிகள் அணி நேற்று வெற்றிபெற்றது.

வடக்கு மாகாணத்தில் இரண்டாவது வருடமாக நாடாத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டி நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

35 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்டப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய வைத்தியர்கள் அணி 34.4 ஓவரில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களை எடுத்தது.

227 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சட்டத்தரணிகள் அணி 22.3 ஓவரில் மூன்று விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைதொடர்பானவிழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில்குறித்தபோட்டி யாழ்ப்பாணமருத்துவசங்கத்தினால் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டது.

கடந்த வருடம் முதல் தடவையாக நாடாத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டியிலும் சட்டத்தரணிகள் அணியே வெற்றி பெற்றிருந்தது.

போட்டியில் விருந்தினர்களாக நீதிபதிகள், வைத்திய நிபுணர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வலைப்பந்துப் போட்டியில் மருத்துவர்கள் அணி வெற்றி



சிறுநீரக மாற்றுச் சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வுக்காக வடக்கு மாகாணத்தில் வைத்தியர்கள் மற்றும் சட்டத்தரணிகள் இடையே சிநேகபூர்வமாக இடம்பெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில் வைத்தியர்கள் அணி வெற்றி பெற்றது.

இந்தப்போட்டிநேற்றுமாலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

வைத்தியர்கள் அணி 34 புள்ளிகளையும் சட்டத்தரணிகள் அணி 8 புள்ளிகளையும்பெற்றன. சட்டத்தரணிகள் அணி படுதோல் வியடைந்தது.

சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறித்த போட்டி யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தினால் இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டது. போட்டியில் விருந்தினர்களாக நீதிபதிகள், வைத்திய நிபுணர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சங்கானை சிவப்பிரகாச வித்தியில் மாணவர் நாடாளுமன்றம் நேற்று




வலிகாமம் கல்வி வலயதிற்குட்பட்ட சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாணவர் நாடாளுமன்றம் வித்தியாலயத்தின் அதிபர் இ.சிறிதரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

மாணவர் மத்தியில் மக்களாட்சி தத்துவத்தை எடுத்துச்செல்லும் முகமாகவும் ஜனநாயகப் பண்பினை ஏற்படுத்தும்முகமாகவும்குறித்தமாணவர் நாடாளுமன்றம் இடம்பெற்றது.

ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களால் சபாநாயகர் பிரதி சபாநாயகர் உட்பட்ட நாடாளுமன்றப் பதவிகளுக்கான தெரிவு இடம்பெற்று. தொடர்ச்சியாக நாடாளுமன்ற அமர்வில் மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களிடை வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்றன.

வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விபணிப்பாளர்ஜமுனாராஜசீலன், வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர்சமூகவிஞ்ஞானம் லதிஸ்கிரேஸ் விக்ரர் ஜெயகுமார், பழைய மாணவர் சங்க செயலாளர் பஞ்சநாதன் ஜெயந்தன்,பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் பி.ராஜசேகரன், அரசறிவியல் மன்ற பொறுப்பாசிரியர் பிரதாப், மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் இந்த நாடாளுமன்ற நடவடிக்கையின் பார்வையா ளர்களாகக் கலந்து கொண்டிருந்தனர். (03)

# உரிமை கோரலாம்

கிளிநொச்சி மாவட்ட நீமன்ற வழக்குகளுடன் தொடர்புடைய சான்றுப் பொருட்களாக கிளிநொச்சி பொலிஸ் அதிகாரியால் பாரப்படுத்தபட்டுள்ள பொருட்களில் பலவற்றுக்கு உரிமைகோருபவர்கள் இருப்பின் உரிய ஆவணங்களுடன் பதிவாளரை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

NP BGB 3313 NPJL -6534 .NPWD -6567. NPCC-49 .NPHR- 2462 .. NPCD-5564. WPMQ -0620. NPGI- 5854. MD2DSPAZZTWM85062 ஆகிய மோட்டார் சைக்கிள்கள், இந்தப்பொருட்கள்தொடர்பில்உரிமைகோருபவர்கள்இருப்பின் ஜூன் 19க்கு முன்னர் உரிய ஆவணங்களுடன் நீதிமன்ற பதிவாளரை தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (55)

# கல்முனை வங்கிச் சங்க பணிப்பாளர் நியமனம்



அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேச செயலக பிரிவின்,கல்முனை வங்கி சங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக சிரேஷ்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம். நௌசாத் வெள்ளிக்கிழமை கடமையேற்றுக்கொண்டார்.

கல்முனை பிரதேச செயலகத்தில், பிரதேச செயலாளர்ஜே.லியாக்கத்அலி முன்னிலையில் கல்முனை வங்கிச்சங்கத்தின்முகாமைத்துவப்பணிப்பாளராகசிரேஷ்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம். நௌசாத் கடமையினைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கல்முனை பிரதேச செயலக சிரேஷ்ட தலைமை சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், சிரேஷ்ட கருத்திட்ட முகாமையாளர் ஏ.எம்.எஸ்.நயீமா, மகா சங்க சிரேஷ்ட உதவி முகாமையாளர் எம்.எம்.மன்சூர்,சமுர்த்திப் பிரிவில் கடமையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# பாலிநகர் வயலிலிருந்து சடலம் மீட்பு

(ஜெ.பிராந்த்)

முல்லைத்தீவு,மல்லாவி பாலிநகர் 3 வாய்க்கால் வயலில்இருந்துசடலம்ஒன்று நேற்றிரவு மீட்கப்பட்டுள்ளது

இல 53, கட்சன் வீதி, வட்டகச்சியை சேர்ந்த இளையதம்பி ராஜ்மோகன் (49) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரைக்காணவில்லை என தேடியபோதே அவரது சடலத்தைக்கண்டுபிடித்தனர் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

துணுக்காய் விநாயகபுரம் பகுதியில் வசித்து வந்த நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தபோதே இவர் காணாமல் போயிருந்தார் என்று தெரிவித்த மல்லாவி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சொகுசு பஸ்ஸில் கஞ்சா கடத்தல் வவுனியாவில் ஒருவர் சிக்கினார்

சொகுசு பஸ்ஸில் கேரள கஞ்சாவைக் கடத்திச் சென்ற நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் சொகுசு பஸ்ஸில் கஞ்சா கடத்தப்படுகின்றது என வவுனியா பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைக்கப் பெற்றிருந்தது.

அதற்கமைய வவுனியா மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் நேற்றுக் காலை சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் குறித்த பஸ்ஸை வழிமறித்து அதில் சோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது பஸ்ஸில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட ஒரு கிலோ 900 கிராம் கேரள கஞ்சாவை மீட்டனர்.

அதனை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர்.

# களுத்துறையில் ஒருவர் கொலை



களுத்துறையில்ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பலாதொட்ட - கொட பராகாஹேன பகுதியில் நேற்றிரவு குறித்த நபர் கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் வசிக்கும்திருமணமாகாத43 வயதுடைய சுஜித் தர்மசேன என்ற நபரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் தனது வீட்டுக்கு அருகில் நடந்து சென்ற வேளையிலேயே இவ்வாறுதாக்குதலுக்குள்ளாகி தலை மற்றும் கழுத்துப் பகுதிகளில் காயங்களுக் குள்ளாகியுள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம்என்று பொலிஸார் சந்தேகிப்பதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I | English for all | Sunday the 18th June 2023

We welcome students' articles in word for publication -Editor- kalaikkathirvisi@gmail.com

# Vocabulary

Understanding the words used to construct sentences is the best way to begin practicing for a reading comprehension test. Using a dictionary is, of course, the best way to define a word. Get into the habit of using a dictionary as you work through this book. Make it part of your basic study materials, and keep it right beside you as you go through this book.

But if you're in a testing situation and you are not allowed to use one, rely on the context clues in the sentence. The term context clues means that other words in the sentence "give away" or give clues to the definition. For example, sometimes you will find synonyms (words that mean the same thing) or antonyms (words that mean the opposite), or details that lead you to identify the vocabulary word in question. Once in a while, you will find a group of words set off by commas (called an appositive), which gives you a very clear definition of the word.

***Read the following sentences and try to choose the best definition for the italicized word by searching for context clues in the sentence.***

1. The designer window treatments in her house, installed 17 years ago, were outmoded.
a. unnecessary b. pointless
c. out-of-date d. worthless

2. The spies conducted a covert operation.
a. dangerous b. foreign
c. hidden d. illegal

3. The baseball player's malice toward the referee was revealed in his spiteful remarks to the media, which almost ruined the referee's career.
a. vindictive b. crazy
c. rude d. unpleasant

4. Although Zachary is much too inexperienced for the managerial position, he is a willful young man and obdurately refuses to withdraw his application.
a. foolishly b. reluctantly
c. constantly d. stubbornly

5. His neighbor's superficial remarks trivialized the property line dispute and infuriated Malcolm.
a. enraged b. petty
c. insulting d. misleading

6. She showed a blatant disregard for the rules.
a. obvious b. hidden
c. last-minute d. rebellious

7. Her fashion sense was usually described as flamboyant, but on the night of the party, Tanya's outfit was uncharacteristically modest.
a. impeccable b. showy
c. sloppy d. unassuming

8. Mr. Powers was so gullible that he believed even the most outlandish excuses of his insincere employees.
a. intelligent b. naive
c. dishonest d. critical

9. You cannot become a certified teacher without completing the prerequisite student-teaching assignment.
a. required b. optional
c. preferred d. advisable

10. Charles, aware of his susceptibility to gum disease, is diligent about flossing.
a. uncomfortable b. excited
c. thorough d. ambivalent

11. Even though she'd read her supervisor's memo four or five times, she still found his rambling message ambiguous.
a. profound b. inspiring
c. ridiculous d. unclear

12. Excited about winning the award, Marcia walked up to the podium and delivered an animated acceptance speech.
a. abbreviated b. courteous
c. reserved d. lively

13. The intermittent rain soaked the garden many different times during the day.
a. protracted b. periodic
c. incredulous d. light

14. I got a vicarious thrill watching you on the diving board.
a. shared b. unpleasant
c. adventurous d. evil

15. After several small brushfires at the campground, officials felt the need to augment the rules pertaining to campfires.
a. criticize b. retract
c. consider d. expand

16. As soon as the details of the election were released to the media, the newspaper was inundated with calls—far too many to be handled effectively.
a. provided b. bothered
c. rewarded d. flooded

17. The doctor got to the crux of the issue.
a. outline b. opposite
c. crucial point d. unhealthy

18. When people heard that timid Bob had taken up skydiving, they were incredulous.
a. fearful b. outraged
c. convinced d. disbelieving

19. The technical department enthusiastically hired Ms. Long because she was proficient in the use of computers.
a. sincere b. adequate
c. competent d. skilled

20. Even under tremendous public pressure, the planning committee would not commit itself wholeheartedly to the proposal and gave only tentative approval to the waterfront development plan.
a. provisional b. ambiguous
c. unnecessary d. total

21. The preacher used a euphemism for an unpleasant subject.
a. ugly picture b. substituted word
c. homeless person d. visual aid

22. Since the townspeople were so dissatisfied, various methods to alleviate the situation were debated.
a. ease b. tolerate
c. clarify d. intensify

23. That perfume always evokes pleasant memories.
a. angers b. erases
c. calls up d. confuses

24. The attorney wanted to expedite the process because her client was becoming impatient.
a. accelerate b. evaluate
c. reverse d. justify

25. The suspect gave a plausible explanation for his presence at the scene, so the police decided to look elsewhere for the perpetrator of the crime.
a. unbelievable b. credible
c. insufficient d. apologetic

"konwledge isn't free. You have to pay attention"

**26. He based his conclusion on what he inferred from the evidence, not on what he actually observed.**
a. predicted b. imagined
c. surmised d. implied

**27. The neighborhood-watch group presented its ultimatum at the town board meeting: Repave the streets or prepare for protests.**
a. earnest plea b. formal petition
c. solemn promise d. non-negotiable demand

**28. The editor of the newspaper needed to be sure the article presented the right information, so his review was meticulous.**
a. delicate b. painstaking
c. superficial d. objective

**29. The general public didn't care about the trial and was apathetic about the verdict.**
a. enraged
b. indifferent
c. suspicious
d. saddened

**30. The doctors were pleased that their theory had been fortified by the new research.**
a. reinforced b. altered
c. disputed d. developed

**31. The captain often delegated responsibility to his subordinates, so as to have time to do the important tasks himself.**
a. analyzed b. respected
c. criticized d. assigned

**32. The news about toxic waste dumping aroused the anger of many viewers of the news broadcast.**
a. informed b. appeased
c. provoked d. deceived

**33. The athlete was adroit at handling the ball.**
a. clumsy b. large
c. obnoxious d. skillful

**34. The new shipping and receiving building is an expansive facility, large enough to meet our growing needs.**
a. obsolete b. meager
c. spacious d. costly

**35. The attorneys were now certain they could not win the case, because the ruling had proved to be so detrimental to their argument.**
a. decisive b. harmful
c. worthless d. advantageous

**36. My brother drives us crazy by crooning in the shower.**
a. hooting b. bellowing
c. crying d. shouting

**37. Mark seems very pensive today.**
a. writing b. hostile
c. cooped-up d. thoughtful

**38. The air in the rainforest was humid, making the heat seem even more smothering than before.**
a. hot b. damp
c. hazy d. volatile

**39. The balloon, loose from its string, rose up into the sky, a shiny purple sphere.**
a. circle b. globe
c. ovoid d. nodule

**40. After the storm caused raw sewage to seep into the ground water, the Water Department had to take measures to decontaminate the city's water supply.**
a. refine b. revive
c. freshen d. purify

# Answers

**1. c. To be outmoded is to be old-fashioned or out-of-date. The designer window treatments may also be unnecessary, pointless, or even worthless. However, the key to the meaning is the context—that is, the phrase installed 17 years ago.**
**2. c. Something that is covert is hidden. It is related to the word cover something covert is covered from view.**
**3. a. To be spiteful is to be vengeful or vindictive. The keys here are the word malice and the phrase almost ruined the referee's career.**
**4. d. When something is done obdurately, it is done in an inflexible or intractable manner, or stubbornly. The key here is the words willful young man.**
**5. b. A superficial remark is insignificant and shallow, or petty. The key here is the word trivialized.**
**6. a. Something blatant is done openly and boldly; it is obvious, out in the open, undisguised.**
**7. b. Something that is flamboyant is flashy or showy. The keys here are the words usually described as flamboyant and but . . . uncharacteristically modest.**
**8. b. To be gullible means to be easy to fool or naïve. The keys here are the words outlandish excuses and insincere employees.**
**9. a. A prerequisite is something that is necessary or required. The fact that you can't become a certified teacher without completing the student teaching assignment means it is required. The other choices do not imply a hard and fast rule.**
**10. c. To be diligent is to be painstaking or thorough.**
**11. d. To be ambiguous is to be vague or unclear.**
**12. d. Something that is animated is energetic or lively.**
**13. b. When something is intermittent, it is periodic or starts and stops at intervals.**
**14. a. The word vicarious means experienced through the efforts of another person. The person speaking experienced the thrill of the high dive through the efforts of the person on the diving board.**
**15. d. To augment something is to add to or expand it. Although choice c, consider, is not out of the question, since officials are responding to several fires that have already occurred, it is more likely that they will do something more pronounced and definitive than just considering the existing rules.**
**16. d. To be inundated is to be overwhelmed or flooded.**
**17. c. The word crux is related to cross, and refers to the point where two things intersect. It is used to describe the crucial point, the central issue.**
**18. d. When one is incredulous, one is skeptical or disbelieving.**
**19. d. When one is proficient at something, one is an expert or is skilled at it.**
**20. a. When something is tentative, it is of an uncertain or provisional nature.**
**21. b. A euphemism is a pleasant word or phrase used in place of an unpleasant or offensive word or phrase.**
**22. a. To alleviate something is to make it more bearable or to ease it.**
**23. c. To evoke means to call forth.**
**24. a. To expedite a process is to hurry it up or accelerate it.**
**25. b. If something is plausible, it is believable or credible.**
**26. c. To infer something is to surmise it or deduce it from the evidence.**
**27. d. An ultimatum is a final statement of terms or non-negotiable demand.**
**28. b. To be meticulous is to be extremely careful or painstaking.**
**29. b. To be apathetic is to show little or no interest or to be indifferent.**
**30. a. To be fortified is to be strengthened or reinforced.**
**31. d. To delegate a task is to assign it or to appoint another to do it.**
**32. c. To arouse someone is to stir up or provoke that person.**
**33. d. To be adroit is to be skillful with one's hands. It is the opposite of clumsy.**
**34. c. If something is expansive, it is broad, open, or spacious.**
**35. b. If a thing is detrimental, it is injurious or harmful.**
**36. b. Crooning and bellowing both mean singing.**
**37. d. To be pensive means to be deep in thought.**
**38. b. Humid and damp both mean the same thing in this context.**
**39. b. A sphere is a globular (globe) object.**
**40. d. To decontaminate and to purify both mean to remove impurities.**




# Digital vs. Print Reading Which one's better?

Are you trying to study with your laptop and smartphone? You might even argue that you need your phone to study because that's how you read your textbook. You might even be reading this digitally if your school has shifted to digital texts in favour of old-fashioned textbooks. In this post, we'll see what the research says about reading digitally vs. on print so you can make an informed decision.

With the increase in digital texts for schools, there have been many studies to see how this affects reading comprehension, an important cognitive process in learning. Delgado et al. (2018) reviewed the research on reading on screen vs. reading digitally in a study called "Don't throw away your printed books". From the title, you can probably guess the results.

A meta-analysis comparing print vs. digital reading (Delgado et al., 2018): The aim of this meta-analysis was to analyze existing studies to see if reading medium (e.g. print or digital) affects reading comprehension. The researchers analyzed data from 54 studies involving over 170,000 participants conducted between 2000-2017. The results showed that screen reading was consistently associated with lower reading comprehension scores. The effect size of digital screens on reading was -0.21, a relatively small effect size. However, in the context of reading comprehension, this is quite a large effect. Delgado et al. point out that kids in elementary school improve on average each year by about 0.32. A negative effect of -0.21, therefore, is quite significant. The researchers state that the "…straightforward conclusion is that providing students with printed texts despite the appeal of computerized study environments

It's quite rare to find a meta-analysis that conveys such a consistent pattern. Their results are fairly conclusive and consistent with other meta-analyses on the same topic. Results also showed that print was consistently better for reading comprehension when time was limited and the genre was non-fiction. They also found that as time went on (from 2000 to 2017) the advantages of print increased and devices that require scrolling are worse than those that do not.

However, while Delgado et al. conclude that print is better, they also realize that "…given the unavoidable inclusion of digital devices in our contemporary educational systems, more work must be done to train pupils on dealing with performing reading tasks in digital media, as well as to understand how to develop effective digital learning environments" (Delgado et al. 2018). In other words, schools are going to keep giving students stuff to read online, so you have to learn how to deal with it.

One idea could be to teach annotation skills like highlighting and commenting to improve active reading strategies with digital text. The deeper you engage in the material you're trying to learn, the more likely you are to remember it. Active reading strategies like highlighting, annotating, and asking yourself questions as you read are all effective at improving reading comprehension. These might be easier to do with print books compared to digital readers which is why they're better for studying.

If you prefer to read online or that's your only choice, how can you bridge the gap? Studies have found that the differences between reading comprehension in print vs. digital resources can be reduced if readers practice active reading strategies like writing down key words or writing a summary of the material just read (5). What about annotating digital texts? Could this improve comprehension? Investigating this was the aim of the following study.

The influence of text annotation tools on print and digital reading comprehension (Ben-Yehuda and Eshet-Alkalai, 2014): The aim of this study was to see how using annotation techniques when reading (both print and digital formats) would affect reading comprehension. Participants were 93 college students from the Open University in Israel. They were randomly allocated to read an informational text of about 850 words on fossils either digitally (PDF) or in print. They were further divided by asking half in each condition to annotate (highlight and make comments) while reading or to just read the text. Digital readers used Adobe tools whereas print readers used a regular highlighter and a pen. Afterwards, they were tested on their comprehension of the text based on factual and inferential (reading between the lines) questions. The results were consistent with other studies – those reading in print scored better on the reading comprehension tests than those reading in digital format. Not surprisingly, the print with annotations group scored better than the print without annotations group. However, this difference was only significant for the inferential questions; annotations made no difference in factual recall. A surprising finding was that annotations made no improvements in reading comprehension when using digital formats.

The pattern is clear – print reading is better than digital reading for comprehension. If annotations aren't the answer, the question remains: why is print consistently better than digital? Cognitive load is one common explanation for the superiority of print vs. digital reading. Cognitive load is the amount of mental energy you are using to perform a task. Let's say you can keep a maximum 5 things in your mind at a time (i.e. in your working memory), if you're trying to think of 5 different things that's a high cognitive load, whereas trying to remember just one thing is a low cognitive load.

One reason why reading on your phone is an issue is because simply having your smartphone near you while studying reduces your working memory capacity. This is because of cognitive load which is further separated into extraneous and intrinsic cognitive load. Your phone is a source of extraneous cognitive load – information that is irrelevant to the learning task that places demands on your working memory. This interferes with your ability to learn the material you're studying. You're thinking about the phone and that's taking up valuable mental space, space you need for filling with the information you're revising. This is the opposite of intrinsic cognitive load, which are the cognitive demands of the specific learning task.

Extraneous cognitive load is the demand on your working memory from stuff that's not directly relevant to what you're learning. According to cognitive load theory, reducing extraneous load will help you learn things easier.

Just having your phone in your hands is a source of extraneous cognitive load, reducing your available working memory resources to devote to reading. A book has just the information, whereas a digital medium (website, browser, phone, etc.) comes with an array of possible distractions all fighting for your attention.

What about other readers that are designed just for reading? These don't have notifications or apps. In the previous study, the researchers suggest the finding that "…annotation did not influence comprehension in the digital condition could be explained, at least partially, by the high cognitive load that results from the structure of a digital text." The mere structure of the e-reader takes more cognitive effort to place a text in context when it's more difficult on a screen reader to see what came before and after the bit you're reading. The undeniable benefit of a physical book is the ease with which you can place the text in context. Where information is placed in a text can help comprehension because we learn by making connections. With a dart of the eyes we can skim over pages and see the headings and images and we can see what came before and what comes after (i.e. we can put the text we're reading into context). You can easily flick through the chapters of this book, for example, and see that you just learned about how smartphone distractions can reduce working memory and this lesson connected to that to suggest another possible use for smartphones. Putting text in context like this is much harder in digital readers because once it disappears from the screen it's gone, out of sight and out of mind. This might be why studies comparing print, scrolling, and non-scrolling show those that have to scroll score worse on reading comprehension tests.

It's not all bad news, though. If you like reading fiction on your Kindle you might be okay. Delgado et al.'s meta-analysis found that there's no clear difference in reading comprehension when the genre is fiction. However, if you're cramming for a test in a hurry, you would be better off putting down the phone and opening a textbook.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.06.2023இல் வெளியிடப்பெற்றது.